RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-63 | 09 மார்ச் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஸ்டாலின் தலைமையில் இன்று திமுக எம்.பி.க்கள் கூட்டம்! துரைமுருகன் அறிவிப்பு

சென்னை: மார்ச்.9

மத்திய பட்ஜெட் கூட்டத் தொடரின் 2ம் பாகம் மார்ச் 10ம் தேதி தொடங்கவுள்ள நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (மார்ச்.9) திமுக எம்.பி.க்கள் கூட்டம் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர், ஜனவரி 31ம் தேதி தொடங்கியது. தொடர்ந்து, மத்திய அரசின் 2025 26 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப். 1ம் தேதி தாக்கல் செய்தார். பல்வேறு அமளிகளுக்கு மத்தியில் கூட்டத்தொடரின் முதல் பகுதி பிப்ரவரி 13 அன்று முடிவடைந்தது. இடைவேளைக்குப் பிறகு கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதி மார்ச் 10 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 4 வரை நீடிக்கிறது.




இந்நிலையில், நாடாளுமன்றத்தில் பங்கேற்க உள்ள திமுக எம்.பி.க்களின் ஆலோசனைக் கூட்டம். இன்று (9ம் தேதி) காலை 11 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது.

இந்தித் திணிப்பு, தொகுதி மறுவரையறை விவகாரங்கள் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டத் தொடரில் விவாதத்தை கிளப்ப திமுக தயாராகி வரும் சூழலில், திமுக எம்.பி.க்கள் ஆலோசனை கூட்டம் நாளை நடைபெறுவது கவனம் பெறுகிறது.

இந்தக் கூட்டம் தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை காலை 10.30 மணிக்கு, சென்னை,

அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும். அதுபோது, கழக மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்." என வலியுறுத்தியுள்ளார்

## 'எந்த கட்சியுடனும் கூட்டணி வைக்க அதிமுக தவம் கிடந்ததில்லை' இபிஎஸ்

சென்னை, மார்ச்.9

எந்த கட்சியுடனும் கூட்டணி வைக்க அதிமுக தவம் கிடந்ததில்லை என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் அரசியல் கட்சிகள் மத்தியில் தேர்தல் ஜுரம் பரவி வருகிறது. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில், மறைமுகமாக இப்போதே தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டனர். திமுக, அதிமுக போன்ற பிரதான கட்சிகளில் இப்போதே உத்தேச வேட்பாளர் பட்டியலையும் தயாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. கட்சி சார்பில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அரசியல் தலைவர்கள் மைக்கை பிடித்தாலே தேர்தல், கூட்டணி தொடர்பாகவே பேசி வருகின்றனர். இதனால் தமிழகத்தில் அரசியல் களம் சூடு பிடித்துள்ளது.

இந்நிலையில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, நேற்று கோவையில் செய்தியாளர்களிடம் கூறும்போது, 'பாஜக தீண்டத்தகாத கட்சி, நோட்டா கட்சி, கூட்டணியில் பாஜக இருந்ததால்தான் தோற்றோம், பாஜகவுடன் கூட்டணி வைக்க மாட்டடோம் என்றெல்லாம் கூறியவர்கள் இன்று பாஜகவுடன் கூட்டணி வைக்க தவம் கிடக்கிறார்கள். அவ்வாறு தவம் இருக்கவேண்டிய சூழ்நிலையை பாஜக தொண்டர்கள் ஏற்படுத்தியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் மகளிரணி சார்பில் இன்று நடைபெற்ற மகளிர் தின விழாவில் பங்கேற்ற கட்சியின் பொதுச்செயலாளரிடம் கேட்டபோது முதலில், "தவறாகப் பேசாதீர்கள். அதிமுக என்று அண்ணாமலை குறிப்பிட்டுச் சொன்னாரா? தேவையில்லாமல் அவதூறு பரப்ப வேண்டாம்." என்றார்.

அதனைத் தொடர்ந்து, "அதிமுகவை பொறுத்தவரை கட்சி தொடங்கியதில் இருந்து இன்று வரை, எந்த கட்சியுடனும் கூட்டணி வைக்க தவம் கிடந்த சரித்திரம் கிடையாது. அதிமுகவை பொறுத்தவரை பலம் பொருந்திய கட்சி. அதிமுகவை தோற்றுவித்ததில் இருந்து இன்று வரை கூட்டணி வைக்க தவம் கிடந்தது கிடையாது." என்றார்.

'கையெழுத்து இயக்கம் தொடக்கம்' சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அதிமுக மகளிர் அணியின் சார்பில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில் இன்று (சனிக் கிழமை), நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டார்.

பின்னர், தலைமைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பலூன்களைப் பறக்கவிட்டார். தொடர்ந்து, வெண்புறாக்களையும் பறக்கவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, 77 கிலோ எடை கொண்ட கேக்கினை வெட்டி, கழக மகளிர் அணி நிர்வாகிகளுக்கும், வீராங்கனைகளுக்கும். பத்திரிகையாளர்களுக்கும் வழங்கினார். முன்னதாக, மகளிர் அணிச் செயலாளர் பா. வளர்மதி தலைமையில், எடப்பாடி பழனிசாமிக்கு, மகளிர் அணியினர் சாக்லேட் மாலை அணிவித்தனர். பின்னர், உலக மகளிர் தின சிறப்புப் பாடல் அடங்கிய குருந்தகடினை வெளியிட்டார் ஏழை, எளிய மகளிர் பயன்பெறும் வகையில், உதவிகளை வழங்கினார்.

நிறைவாக, 'மகளிர் நலன் காக்க மாற்றம் வேண்டும்' என கையெழுத்து இயக்கத்தைத் தொடக்கிவைத்து தானும் கையெழுத்திட்டார்.

## "பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யாத திமுக அரசை மாற்றுவோம்" மகளிர் தின வாழ்த்தில் விஜய் 'அரசியல்'

சென்னை , மார்ச்.9

"பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யாத திமுக அரசை மாற்றுவோம்" என சர்வதேச மகளிர் தின வாழ்த்தில் நடிகர் விஜய் கூறியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தங்களின் வாழ்த்துகளை நேற்றே தெரிவித்திருந்தனர். ஆனால் தவெக தலைவர் விஜய் நேற்று அக்கட்சியின் முதல் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கவனம் செலுத்தினார்.



இந்நிலையில் தமிழக முதல்வர், அரசின் பெண்களுக் கான நலத்திட்டங்களை பட்டியலிட்டு மகளிர் தின வாழ்த்தை வீடியோவாக வெளியிட்ட சில மணி நேரங்களில் தவெக தலைவர் விஜய்யும் மகளிர் தின வாழ்த்து வீடியோவை வெளியிட்டார்.

அந்த வீடியோவில் விஜய், "எல்லோருக்கும் வணக்கம். இன்று மகளிர் தினம். தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் அனைவரையும் எனது அம்மா, அக்கா, தங்கை, தோழியாகக் கருதுகிறேன். உங்கள் அத்தனை பேருக்கும் மகளிர் தின வாழ்த்துகள் சொல்லாமல் இருக்க முடியாது. அனைவருக்கும் எனது மகளிர் தின வாழ்த்துகள். சந்தோஷம்தானே !?. பாதுகாப்பாக இருக்கும்போதுதானே சந்தோஷமாக இருக்க முடியும். அப்படி எந்த பாதுகாப்பும் இல்லாதபோது சந்தோஷம் இருக்காது தானே ! அப்படி நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. என்ன செய்ய. நீங்கள், நான் எல்லோரும் சேர்ந்துதான் இந்த திமுக அரசை தேர்ந்தெடுத்தோம். ஆனால் அவுங்க இப்படி நம்மை ஏமாற்றுவார்கள் என்று இப்போதுதான் தெரிகிறது. எல்லாமே இங்க மாறக்கூடியதுதானே. மாற்றத்துக்கு உரியதுதானே. கவலைப்படாதீங்க. இந்த 2026ம் ஆண்டு, நீங்க, நான் எல்லோரும் சேர்ந்து பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிய திமுகவை மாற்றுவோம். அதற்கு மகளிர் தினமான இன்று நாம் எல்லோரும் சேர்த்து உறுதியேற்போம். உங்களுடைய எல்லா சூழலிலும் ஒரு மகனாக, அண்ணனாக, தம்பியாக, தோழனாக நான் உங்களோடு நிற்பேன். நன்றி, வணக்கம்." என்று கூறியுள்ளார்.

'வாழ்த்தில் தேர்தல் அரசியல்' தமிழக முதல்வரின் மகளிர் தின வாழ்த்து முழுவதும் அரசின் நலத்திட்டங்களைப் பட்டியலிட்டதாக அமைய, தவெக தலைவர் விஜய்யின் வாழ்த்து முழுவதும் ஆளும் திமுக அரசின் மீதான குற்றச்சாட்டாகவும், ஆட்சி மாற்றத்தைக் கோருவதாகவும் அமைந்துள்ளது. வாழ்த்தில் இருவரும் தேர்தல் அரசியலை முன்னெடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். 2026 மே மாதம் தமிழக சட்டப்பேரவைக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு இப்போதிருந்தே தமிழக தேர்தல் அரசியல் களம் சூடு பிடிக்கத் தொடங்குகிறதோ எனத் தோன்றும் அளவுக்கு, அதிமுகவின் அரசியல் கூட்டணி நகர்வுகள், திமுகவின் இந்தி திணிப்பு, தொகுதி மறுவரையறை என தேசிய பிரச்சினைகளைத் தழுவிய அரசியல், தவெகவின் 'மாற்றத்துக்கான அரசியல்' என்ற சுய தம்பட்டங்கள் என அரசியல் களம் தேர்தல் பரபரப்புக்குள் நுழையத் தொடங்கியுள்ளதாக அரசியல் நிபுணர்கள் கணிக்கின்றனர்.





மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் உலக மகளிர் தினவிழா மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், ஆகியோர் தலைமையில் கொண்டாடப்பட்டது அருகில் மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி , மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 'யாரோ அம்பலப்படுத்தியதால் வரிகளை குறைக்க இந்தியா ஒப்புதல்' ட்ரம்ப் விமர்சனம்

வாஷிங்டன், மார்ச்.9

பரஸ்பர வரி விதிப்பு அறிவிப்பினைத் தொடர்ந்து, அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு வரிகளை குறைக்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மேலும் "அவர்கள் செய்ததை யாரோ ஒருவர் அம்பலப்படுத்தியதால் இந்தியா இந்த முடிவெடுத்துள்ளது" என ட்ரம்ப் தெரிவித்தார்.



வெள்ளை மாளிகையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப் கூறுகையில், "இந்தியா நம்மிடம் மிக அதிகமான வரிகளை வசூலிக்கிறது, அதிகமாக! உங்களால் இந்தியாவில் எதனையும் விற்பனை செய்ய முடியாது. ஒருவழியாக அவர்கள் தங்களின் வரிகளை குறைக்க ஒப்புக்கொண்டுள்ளனர். அவர்கள் செய்ததை யாரோ ஒருவர் அம்பலப்படுத்தியதால் அவர்கள் தங்களின் வரிகளைக் குறைக்க விரும்புகிறார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், அமெரிக்க வர்த்தகத்துறை அமைச்சர் ஹோவார்ட் லுட்னிக் உடன் வர்த்தக பேச்சுவார்த்தைக்காக வாஷிங்டன் சென்றிருந்த நிலையில் ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

இதனிடையே இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் ரன்திர் ஜெய்ஸ்வால் கூறுகையில், " இந்திய, அமெரிக்க அரசுகள் பல்வேறு துறைகளில் இருதரப்பு வர்த்தகங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றன. இது, நிஜிகி மூலமாக பொருட்கள் மற்றும் சேவைகளில் இந்தியா அமெரிக்கா இருவழி வர்த்தகத்தை வலுப்படுத்தவும், ஆழப்படுத்தவும், வரிகள் மற்றும் வரிகள் அல்லாத தடைகளைக் குறைக்கவும், இரு நாடுகளுக்கு இடையிலான விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கும்." என்று தெரிவித்திருந்தார்.

முன்னதாக அமெரிக்கர்களுக்கு நியாயமற்ற வரி விதிப்பு கொள்கைகளை கொண்டிருக்கும் தெற்காசிய நாடுகளுக்கு ஏப்ரல் 2ம் தேதி முதல் பரஸ்பர வரி விதிக்கப்போதவாக ட்ரம்ப் அறிவித்திருந்தார். இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பதவியேற்ற பின்பு அமெரிக்க நாடாளுமன்றத்தில் முதல் முறையாக உரையாற்றிய டொனால் ட்ரம்ப், "அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் நீங்கள் உங்களின் பொருட்களை உற்பத்தி செய்யவில்லையென்றால், அந்தப் பொருட்களுக்காக நீங்கள் ஒரு வரியை செலுத்த வேண்டியது இருக்கும். சில நேரங்களில் அது மிகப்பெரியதாக இருக்கும்.

பிற நாடுகள் அனைத்தும் பல தசாப்தங்களாக அமெரிக்காவுக்கு எதிராக வரிவிதித்து வருகின்றன. இப்போது நாம் அதை அவர்களுக்குத் திருப்பிச் செய்யும் நேரமிது. பல நாடுகள் நாம் அவர்களிடமிருந்து வசூலிப்பதை விட அதிகமான வரிகளை நமக்கு எதிராக விதிக்கின்றன. அது மிகவும் அநீதியானது. இந்தியா நம்மிடமிருந்து 100 சதவீதத்துக்கும் அதிகமாக வாகனக் கட்டணங்களை வசூலிக்கிறது.

ஏப்ரல் 2ம் தேதி முதல் இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கு எதிரான பரஸ்பர கட்டணங்கள் அமலுக்கு வருகின்றன. ஏப்ரல் 1ம் தேதியில் என நான் ஏன் அறிவிக்கவில்லை என்றால், அது முட்டாள்கள் தினத்துடன் ஒத்துப்போவதை விரும்பவில்லை. ஏப்.2ம் தேதியில் இருந்து அவர்கள் என்ன கட்டணங்கள் நமக்கு விதித்தாலும் நாமும் அவர்களுக்கு ஒரு பரஸ்பர கட்டணத்தை விதிப்போம்." என்று தெரிவித்திருந்தார்.

## தமிழக மீனவர்கள் 14 பேர் கைது இலங்கை கடற்படையினர் மீண்டும் அட்டூழியம்

ராமேசுவரம், மார்ச்.9

மன்னார் வளைகுடா கடற்பகுதியில் தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், கைப்பற்றப்பட்ட படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி, ராமேசுவரம் தீவு மீனவர்கள் கடந்த பிப்ரவரி 24ல் இருந்து காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், பிப் 28ல் இருந்து தொடர்ந்து ஐந்து நாட்கள் தங்கச்சிமடத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மீனவ பிரதிநிதிகளை டெல்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து மீனவப் பிரச்சினை குறித்து வலியுறுத்தவும், இலங்கைக்கு தமிழக மீனவ பிரதிநிதிகளை அழைத்துச் சென்று அங்குள்ள மீனவ பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என தமிழக அரசு சார்பில் அளித்த வாக்குறுதிகளை ஏற்று தொடர் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை பாம்பன் தெற்கு கடற்பகுதியிலிருந்து 100க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் 500 மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். மன்னார் வளைகுடா தெற்கு கடற்பகுதியில் வியாழக்கிழமை இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆரோக்கியம் என்பவரது விசைப்படகை இலங்கை கடற்படையினர் ரோந்துப் பணியின் போது சிறைப்பிடித்தனர்.

படகுகளிலிருந்த ஆரோக்கியம், செல் வம், ஜெயாஸ்டன், ஜோஸ்வா, சீமோன், முத்துராமன், முகி லன், ஆரோக்கியம், வால்டன், மாரிசெல்வம், ஜெயசூர்யா, ரிபாக்சன், தர்மன், .விக்னேஸ்வரன் ஆகிய 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். விசைப்படகையும், 14 மீனவர்களையும் தலைமன்னார் அருகே தாழ்வுபாடு கடற்படை முகாமிற்கு கொண்டு சென்ற இலங்கை கடற்படையினர் மன்னார் மாவட்ட மீன்வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர். மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இன்று (வெள்ளிக்கிழமை) மாலை வவுனியா சிறையில் அடைக்கப்பட உள்ளனர்.

# செங்கல்பட்டில் தவெக தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம்





தாம்பரம் மார்ச் 9

செங்கல்பட்டு தாம்பரத்தில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் தவெக சார்பில் செங்கல்பட்டு தெற்கு மாவட்டத்தில் 150 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 300 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தவெக கட்சியின் மகளிரணி நிர்வாகிகள் ஷிபா, இந்து, ஐஸ்வர்யா, திவ்யா, ஐஸ்வர்யா, விக்டோரியா, மாகாலட்சுமி, அஸ்வினி, பிரியா, தமிழ் செல்வி ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்தனர்.

நிகழ்ச்சியில் தவெக கட்சியின் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் கில்லி டி. சரத் குமார் தலைமையில், தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு, 300 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும், நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள், தற்போதைய ஆளும் திமுக அரசு மீது கடும் கண்டனம் தெரிவித்தனர். திமுக அரசின் ஆட்சி காலத்தில் பெண்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பதையும், பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் மற்றும் கொடுமைகளை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதையும் வலியுறுத்தினர்.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் சமத்துவ உரிமைகளை உறுதிப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மகளிர் குறித்த அனைத்து விதமான அநீதிகளையும் முற்றுகையிட வேண்டும் என கட்சி நிர்வாகிகள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



சிவகங்கை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் இரா. ரெஜினா குமாரி தலைமையில் மின் பயனீட்டாளர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற (11/03/2025) அன்று காலை 11.00 மணி முதல் 01.00 மணி வரை செயற்பொறியாளர்/ பகிர்மானம் மானாமதுரை கோட்டத்தில் நடைபெறுவதால் சிவகங்கை கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் மின்வாரியம் சம்மந்தமான குறைகளை தெரிவித்து செய்து கொள்ளுமாறு மானாமதுரை மின் செயற்பொறியாளர் ஜான்சன் தகவல் தெரிவித்துள்ளார்.

# சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் திமுக சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா





சோழிங்கநல்லூர் மார்ச்.9

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திராவிட முன்னேற்ற கழகக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி, 2000ற்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பிறந்த நாளை விழாவை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த்ரமேஷ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. காமகோடி நகர், பள்ளிக்கரணை மாலை 5 மணிக்கு நடைபெற்ற விழாவில் 189 வது மாமன்ற உறுப்பினர், வட்டக் கழகச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு குழு உறுப்பினருமான, லயன். வ. பாபு அனைவரையும் வரவேற்றார்.

மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை அமைச்சரு மான மா.சுபிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர், கனிமொழி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், தமிழச்சி தங்கபாண்டியன் சிறப்புரையாற்றினார்கள். மேலும் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம் என்று பிறந்தநாள் விழாவில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் நன்றி உரையாக குமரேசன், தேவேந்திரன், பி. கே. தங்கம் உள்ளிட்ட மாவட்ட, வட்ட, பகுதி ,,ஊராட்சி, ஒன்றிய, கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.









மதுரை மாவட்டம் , சக்குடி ஸ்ரீ முப்புலிசுவாமி கோவில் உற்சவ விழாவை முன்னிட்டு நடைபெறும் ஜல்லிக்கட்டு விழாவினை பத்திரப்பதிவு துறை அமைச்சர் மூர்த்தி, தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் பி. ராஜசேகர் உறுதிமொழி ஏற்று தொடங்கி வைத்தனர். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் மற்றும் பலர் உள்ளனர்

# ஸ்ரீராம் கல்வி நிறுவனங்கள் சார்பாக சர்வதேச மகளிர் தின விழா






தாம்பரம் மார்ச்.9

பெருமாள் பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா, கல்லூரி வளாகத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி மேயர் கே.வசந்தகுமாரி, திருவள்ளூர் மாவட்டம் சோதனை அதிகாரி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை , எஸ்.சுதா, ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை சார்பில் கஸ்தூரி பார்த்தசாரதி அவர்கள் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார். விழாவின் தொடக்கமாக மெக்கானிக்கல் துறை மற்றும் கீணிசி தலைவர் முனைவர் ஜி.சுகன்யா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று பேசியதோடு இவ்விழாவை நடத்துவதற்கு அனுமதி அளித்த கல்லூரி நிர்வாகம் மற்றும் முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ் பாபு அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்ந்தார். இவர்களை தொடர்ந்து பேசிய சிறப்பு அழைப்பாளர் தாம்பரம் மாநகராட்சி மேயர் கே.வசந்தகுமாரி, அவர்கள் பேசுகையில், இக்கல்லூரியில் தான் மாணவியாக இருந்தபோது நிகழ்ந்த கல்லூரி அனுபவங்களை மாணவிகள் முன்னிலையில் பகிர்ந்து கொண்டார். மேலும், தன்னுடைய வளர்ச்சிக்கு பெருந்துணையாக இருந்தது இக்கல்லூரியில் படித்த பொறியியல் படிப்பு என பெருமிதம் கொண்டார். பெண்கள் தற்போதைய சமூகத்தை பயமின்றி அணுக வேண்டும் என்று தன் சுய அனுபவங்கள் மூலம் விளக்கிக் கூறினார். மேலும் அரசு வேலை வாய்ப்புகளிலும் போட்டித் தேர்வுகளிலும் குறிப்பாக ( ஐஏஎஸ் ) பயிற்சியிலும் மாணவிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு அரசு அதிகாரிகளாக மாற வேண்டும் என அறிவுறுத்தினார். வாழ்வின் வளர்ச்சிக்கு தேவையான பாதையை வகுத்து அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று ஊக்கம் தரும் உரையை நிகழ்த்தியதோடு மகளிர் தின வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

அடுத்ததாக திருமதி எஸ். சுதா, மாவட்ட சோதனை அதிகாரி , குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை (திருவள்ளூர் மாவட்டம்) அவர்கள் பேசுகையில் இன்றைய சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இருக்கும் பாலியல் துன்புறுத்தல் என பல்வேறு சவால்களை எதிர்த்து போராடும் மனப்பான்மையை மாணவிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று உரைத்தார். வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் கைபேசியை உபயோகித்தல், பெண்களுக்கான சட்டங்களை தெரிந்து கொள்ளுதல், மேலும் மாணவிகள் அரசு பணியில் இடம்பெறும் முனைப்போடு செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியதோடு , மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பேசிய ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை உறுப்பினர் திருமதி. கஸ்தூரி பார்த்தசாரதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். விழாவில் ஸ்ரீராம் கல்வி நிறுவனங்களை சார்ந்த கல்லூரி முதல்வர்கள் மற்றும் பள்ளி முதல்வர் பங்கு பெற்றனர். இதன் தொடர்ச்சியாக சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு சால்வையும், நினைவு பரிசு வழங்கப்பட்டது. முன்னதாக மகளிர் தின விழாவையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வென்ற மாணவியருக்கு பரிசும் , பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கீணிசி தலைவர்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். கீணிசி தலைவர் ஆண்டாள் நன்றி உரை ஆற்றினார்.ன இறுதியாக தேசிய கீதத்துடன் இவ்விழா நிறைவுற்றது..

# வேலூர் மாவட்டத்தில் அமைச்சரின் குடும்பத்தை விழுந்து விழுந்து கவனித்த அரசு உயர்பதவி ஊழியர்! மணிக்கணக்கில் காத்திருந்த கர்ப்பிணி பெண்கள்




வேலூர் மார்ச் 9

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தாராபடவேடு, சித்தூர் பேருந்து நிலையம் அருகேயுள்ள தனியார் திருமண மண்டபத்தில், காட்பாடி தாலுகாவிற்குட்பட்ட சுமார் 150 கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன், அவரது மனைவி சாந்தகுமாரி, அவரது மகன் வேலூரில் கதிர் ஆனந்த், கதிர் ஆனந்த் மனைவி சங்கீதா கதிரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, சுமார் 150 கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் காலை 8 மணி முதல் காத்திருப்பது கர்ப்பிணி பெண்கள் என்று கூட அறியாத, மாவட்ட நிர்வாகம், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட அரசு மாவட்ட உயர்பதவி ஊழியர் செல்வி சாந்தி பிரியதர்ஷினி அமைச்சரின் மனைவி மற்றும் எம்.பி.யின் மனைவி ஆகியோரை மட்டும் விழுந்து விழுந்து கவனித்துமதிய வேலை 12:30 மணி வரை கர்ப்பிணிப் பெண்களை காக்க வைத்திருந்த அவல சூழல் அங்கிருந்த கர்ப்பிணி பெண்களின் நிலை சோர்வடைந்து முகத்தில் சோர்வு காணப்பட்டு முகம் சுளிக்க வைத்தது என்று இப்பகுதி பெண்கள் மற்றும் பெண் சமூக ஆர்வலர்கள் அதிருப்தியடைந்தனர்.

இதுபோன்று கர்ப்ப காலங்களில் அதுவும் வேலூர் மாவட்டத்தில் வெயில் வாட்டி வரும் சூழ்நிலையில் கர்ப்பிணி பெண்களை காக்க வைத்திருந்த, இதுபோன்ற மனமற்ற அரசு உயர்பதவி ஊழியரகள் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்திய திருநாட்டை உயர்த்தி பிடிக்கும் உயரிய எண்ணம் கொண்ட இந்திய குடிமகன்களாய் அனைவரின் கோரிக்கையாக உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் நுணுக்கங்களை அறிந்து மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட நிர்வாகிகளுக்கு இது குறித்து அறிவுறுத்தாதது ஏன்..?எதற்காக இவர் செயல்படுகிறார் யாருக்காக செயல்படுகிறார் மக்களுக்காகவா.... துளி அளவும் இல்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டி வருகின்றனர். ஓராண்டு காலமாக மாவட்டத்திற்கான வளர்ச்சியும் மக்களுக்கான வளர்ச்சியும் ஆராய்ந்து பார்த்தால் வளர்ச்சிக்கான எந்த ஒரு அறிகுறியும் இல்லை, நாளுக்கு நாள் இதற்கு ஆதாரமாக பொதுமக்கள் மற்றும் புகார்தாரர்கள் ஆட்சியர் அலுவலகம் வந்து புகார் மனுக்களை கையில் பிடித்துக் கொண்டு கதறி அழுவதுதான் மிச்சம், எனவே, கர்ப்பிணி பெண்கள் மீதும் கூட அக்கறை செலுத்தாத மாவட்ட ஆட்சியர் எங்கள் மாவட்டத்திற்கு தேவையா....? ஏற்கனவே மாவட்ட ஆட்சியரை மாற்ற வலியுறுத்தி இருந்த நிலையில் மாவட்ட ஆட்சியரை உடனடியாக மிக நேர்மையான மக்களுக்கான நல இந்திய ஆட்சி பணியாளரை, வட மாநில இளம் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை வேலூர் மாவட்டத்திற்கு நியமிக்க பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். மாநில அரசும் மத்திய அரசும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி வேலூரின் பெருமையை உயர்த்திப் பிடிக்க புரட்சிமிகு வேலூரின் பெருமைகளை காப்பாற்றவும், சிப்பாய் புரட்சிக்கான பெயர் பெற்ற வேலூர் மாவட்டத்தை வளர்ச்சியடைய, மத்திய மாநில அரசு துரிதமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய திருநாட்டை உயர்த்தி பிடிக்கும் உயரிய எண்ணம் கொண்டவர்களின் நோக்கமாக உள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் நடைபெறும் விழாவில் மகளிர் சுயஉதவி குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு ஆட்டோ வாகனங்கள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார்கள்., அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், திருப்பாலை. யாதவர் பெண்கள் கலைக்கல்லூரியில் மகளிர் சுய உதவிகுழுக்களை சார்நத உறுப்பினர்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் .மா.செள.சங்கீதா , மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம் கொங்கு மெயின் ரோடு அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கம் அலுவலகத்தில் விவசாயம் மற்றும்தொழிலாளர் கட்சி நிறுவன தலைவர் ஜி.சுப்பிரமணியம் புதல்வரும் விவசாயம் மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் வழக்கறிஞருமான எஸ்.திலகவர்மா மற்றும் விவசாய சங்கத்தலைவரின் துணைவியாருமான எஸ்.சிந்தாமணி ஆகிய இருவரின் பிறந்த நாள் விழா சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் கொண்டாடி மகிழ்ந்தனர்.நிகழ்ச்சியில் கேக் வெட்டியும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.நிகழ்வில் சங்கத்தின் நிர்வாகிகள்,மகளிர் அணியினர்,மற்றும் விவசாய கட்சி உறுப்பினர்கள் பலர் திரளாக கலந்து கொண்டு தங்களது வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டார கிளையின் பொதுக்குழு கூட்டம் இளையான்குடி பள்ளி எண் 4 இல் வட்டார தலைவர் அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் புரட்சித்தம்பி மாவட்ட துணைச் செயலாளர் பஞ்சுராஜ் மாவட்ட துணைத் தலைவர் அமல சேவியர் சிவகங்கை கல்வி மாவட்ட செயலாளர் ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வைத்தனர். கிளைச் செயலாளர் ஜேசு ராஜதுரை அனைவரையும் வரவேற்றார். பள்ளி எண் 2 இல் செயல்படும் இளையான்குடி வட்டார கல்வி அலுவலகத்திற்கென்று தனியாக அலுவலகம் அமைத்திட வலியுறுத்தியும், வட்டார கல்வி அலுவலகத்தின் இளநிலை உதவியாளர் பாலமுருகன் கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக மாற்றுப் பணிக்கு சென்றுள்ளதால் அலுவலகத்தின் பணிகளில் ஏற்பட்டுள்ள தொய்வினை சரிசெய்யும் வகையில் மீண்டும் அவரை அப்பணியில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தினை வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிளைப் பொருளாளர் மரியமலர் நன்றி கூறினார். கூட்டத்தில் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் தோமஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை தேசிய பசுமைப்படை சார்பாக சூழல் பாதுகாப்பில் மரபுசாரா எரிசக்தி குறித்த ஓவியப் போட்டி





சிவகங்கை மார்ச்.9

சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாக பள்ளிக் கல்வித்துறை கூட்டரங்கில் ஓவியப் போட்டி நடைபெற்றது. சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மாரிமுத்து தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறை மாவட்ட உதவி திட்ட அலுவலர் பீட்டர் லெமாயு முன்னிலை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள 6 முதல் 9 வகுப்புகளிலுள்ள 82 மாணவ மாணவிகள் சூழல் பாதுகாப்பில் மரபுசாரா எரிசக்தி குறித்த ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள்.

நடுவர்களாக ஓவியர் செல்வம் ஆசிரியர் பயிற்றுனர்கள் தனலெட்சுமி பிரிஸி சிறப்பாக பணியாற்றினார்கள். ஓவியப் போட்டியில் மிளகனூர் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவன் தினேஷ்குமார் முதலிடத்தையும் சிவகங்கை புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி மாணவன் இராஜ சேதுபதி இரண்டாமிடத்தையும் மரக்காத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவன் கோபாலகிருஷ்ணன் மூன்றாமிடத்தையும் பெற்றனர். மாவட்ட கல்வி அலுவலர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்து சிறப்பித்தார்.

10பள்ளிகளுக்கு ஆறுதல்பரிசு வழங்கப்பட்டது. சிலுக்கப்பட்டி தலைமையாசிரியர் அன்புநாதன் வெள்ளிக்குறிச்சி தலைமையாசிரியர் அருள்மொழி வாழ்த்துரை வழங்கினர். மிகச்சிறப்பான ஏற்பாட்டினை செய்த சிவகங்கை தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் நல்லாசிரியர் பிரிட்டோ நன்றி கூறினார்.



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்ட காவல்துறையின் சார்பாக பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நடை பயணத்தை மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பி .கே .அரவிந்த் கொடியசைத்து தொடங்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில்1000 க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரி , பள்ளி மாணவிகள் மற்றும் பெண் காவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## பழனி மாரியம்மன் கோயில் மாசி திருவிழா சிறப்பு அன்னதானம்...



பழனி மார்ச்.9

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் மாரியம்மன் கோவில் மாசி திருவிழாவை முன்னிட்டு வருத்தமில்லா வாலிபர் சங்கம் சார்பாக 50ஆம் ஆண்டு தினம் அலங்காரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் உபயதாரர் திமுக கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவரும், 7வது வார்டு கவுன்சிலருமான சுரேஷ் குடும்பத்தினர் சார்பாக, அ/மி பேச்சியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்புபூஜைகள் நடைபெற்றது.

தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதான பிரசாதங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் காணியாளர்கள் நரேந்திரன், பன்னாடி ராஜா கந்த விலாஸ் செல்வகுமார், திமுக நகர செயலாளர்கள் வேலுமணி, சிவகிரிபட்டி முன்னாள் தலைவர் மாரியப்பன், அதிமுக நகர செயலாளர் முருகானந்தம், மீனவர் அணி மகுடீஸ்வரன், முஸ்லிம் தர்ம பரிபாலன சங்க செயலாளர் முகமது அலி ஓம் சக்தி ஜுவல்லரி செல்வம், கவுன்சிலர் பத்மினி முருகானந்தம், பிஜேபி நகர தலைவர் ஆனந்தகுமார், வருத்தமில்லா வாலிபர் சங்கத் தலைவர் மூர்த்தி, முருகானந்தம், மற்றும் கவுன்சிலர்கள் விமலபாண்டி, மகேஸ்வரி, சக்திவேல், ஜெபஸ்டின், பூங்கொடி, பார்வதி, பழனிச்சாமி, முருகேசன், சாகுல், அமீது பஜ்லூர் ரஹ்மான், பாபு, அழகேசன், மற்றும் முன்னாள் கவுன்சிலர்கள் தண்டபாணி, மணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## PSY இன்ஜினியரிங் கல்லூரியில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு தற்காப்பு கலை விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருப்புவனம் மார்ச்.9




சிவகங்கை மாவட்டம் பாண்டியன் சரஸ்வதி யாதவ் இன்ஜினியரிங் கல்லூரியின் அரங்கத்தில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகாரம் பெற்று "ஃபிட் இந்தியா" மற்றும் "வாகோ இந்தியா கிக் பாக்ஸிங் ஃபெடரேஷன்" இனைந்து நடத்திய "கிக் பாக்ஸிங் தற்காப்பு கலை விழிப்புணர்வு" நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது, இந்த கிக்பாக்ஸிங் தற்காப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்க தலைவர் சதிஷ்,செயலாளர் குணசீலன் தலைமையில், தலைமை பெண் பயிற்சியாளர் சு. சித்ரா மற்றும் துணை பயிற்சியாளர் பூ.ரே விக்னேஷ் ஆகியோர் கல்லூரி மாணவிகளுக்கு சிறப்பாக தற்காப்பு கலை பயிற்சிவழங்கப்பட்டது, மேலும் இந்த பயிற்சி முகாமில் சிறப்பாக பங்காற்றிய முதலாம் ஆண்டு ணிசிணி டிபார்ட்மெண்ட் மாணவி



பிரியதர்ஷினி சிவகங்கை கிக் பாக்ஸிங் சங்கம் சார்பில் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக ஆறு மாத கால இலவச கிக் பாக்ஸிங் பயிற்சியும் மேலும் மாவட்ட, மாநில அளவில் போட்டியில் பங்கு பெற சங்கமே பொறுப்பேற்கும் என அறிவிக்கப்பட்டது மேலும் அனைத்து மாணவிகளுக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப் பட்டது.



திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் முத்தூர் மேட்டுக்கடை தனியார் மஹாலில் வருவாய்துறையின் சார்பில் சின்ன முத்தூர்,ஊடையம் மற்றும் முத்தூர் பகுதிகளை சார்ந்த பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினர்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க. கார்த்திகேயன், திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல தலைவர் இல.பத்மநாபன், முத்தூர் பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள் ஆகியோர் உள்ளனர்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மதுரை பாரதி யுவகேந்திரா நடத்திய விழாவில், சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருதை, ஈவ்லின் பொன்மலர் அவர்களுக்கு, எழுத்தாளர் லேனா தமிழ்வாணன் வழங்கி கௌரவித்த போது எடுத்த படம். உடன் இடமிருந்து மதுரை ஜல்லிக்கட்டு ரோட்டரி கிளப் ஆதவன், பாரதி யுவகேந்திரா நிறுவனர் நெல்லை பாலு, மூத்த வங்கி மேலாளர் திருப்பதி மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலச்சங்க மாவட்ட தலைவர் பூபதி ஆகியோர் உள்ளனர்.



மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், கரிசல்களாம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.

## ஒட்டன்சத்திரத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.127.11 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை வழங்கிய அமைச்சர்

ஒட்டன்சத்திரம், மார்ச்.9

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிப்பட்டி கலைஞர் நூற்றாண்டு போட்டித் தேர்வு பயிற்சி மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், 1926 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.127.11 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளை வழங்கினார்.



இந்த விழாவில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் 10,050 குழுக்களும், நகர்ப்புற பகுதிகளில் 3,964 குழுக்களும் ஆக மொத்தம் 14,014 மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

வங்கி கடன் இணைப்பாக 2021-22 ஆம் நிதியாண்டில் 18,876 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.992.20 கோடி கடன் உதவி வழங்கப்பட்டது. 202223 ஆம் நிதியாண்டில் 14,779 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.828.60 கோடி கடன் உதவி வழங்கப்பட்டது. 202324 ஆம் ஆண்டிற்கு 14,021 மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.921.00 கோடி கடன் உதவி வழங்கப்பட்டது.

202425 ஆம் ஆண்டிற்கு ரூ.1,043 கோடி வங்கி கடன் இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை 12,746 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.973.86 கோடி வங்கி கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 1,851 சுய உதவிக்குழுவிற்கு மொத்தம் ரூ.125.99 கோடி வங்கிக் கடன் உதவி வழங்கப்படுகிறது.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் உயர்கல்வித் துறை சார்பில் ஆண்கள் மற்றும் பெண்கள் படிக்கும் அரசு கலை மற்றும் கல்லூரிகள் ளிமந்தையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இன்றைய விழாவில்,உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர், திண்டுக்கல் மாவட்டத்தில் 1,851 சுய உதவிக்குழுவிற்கு ரூ.125.99 கோடி வங்கிக் கடனுதவி, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் 36 ஊராட்சிகளை சார்ந்த 75 சுய உதவிக்குழுக்களிலுள்ள 141 உறுப்பினர்களுக்கு ரூ.88,25,000 நுண் நிறுவனக் கடனுக்கான ஆணைகள் மற்றும் 7 பயனாளிகளுக்கு ரூ.23,97,878 மதிப்பீட்டில் 30 சதவீதம் இணை மானியத்துடன் கூடிய கடனுக்கான ஆணைகள் என ஆக மொத்தம் 1,926 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.127.11 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகள், 7 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரம் ஆகியவற்றை வழங்கினார். முன்னதாக மகளிர் சுயஉதவிக்குழுவினர் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியை பார்வையிட்டார்.

விழாவில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஷ்பாபு, கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் சி.குருமூர்த்தி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி, மாவட்ட சமூக நல அலுவலர் கோ.புஷ்பகலா, ஒட்டன்சத்திரம் நகராட்சித் தலைவர் க.திருமலைச்சாமி, ஒட்டன்சத்திரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் .ராஜாமணி, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஒருங்கிணைப்பாளர் சுதாதேவி மற்றும் துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## சித்தையன் கோட்டை பேரூராட்சியில் முடிவற்ற பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்த அமைச்சர்

திண்டுக்கல் மார்ச்:8.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சி பகுதிகளில் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.



இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டு மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் நிருபித்துக் காட்டியுள்ளார். சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், சோஷியலிசத்தை தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றியுள்ளார். அரசின் திட்டங்கள் அனைத்தும், கடைக்கோடியில் வசிக்கும் மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சித்தையன்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேடபட்டியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கூடம், சித்தையன் கோட்டையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை, 4வது வார்டில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நாடக மேடை, யோகம் நகரில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, நரசிங்கபுரத்தில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நாடக மேடை மற்றும் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதிநேர நியாய விலைக்கடை கட்டடம் என மொத்தம் ரூ.1.15 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக

இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசின் திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) ரா. ராஜா, சித்தையன் கோட்டை பேரூராட்சித் தலைவர் போதும் பொன்னு, துணைத் தலைவர் ஜாகீர்உஷேன், வட்டாட்சியர் முத்துமுருகன், செயல் அலுவலர் ஜெயமாலு, அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் விழா

சிவகங்கை மார்ச் 9

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களால் நேற்று (08.03.2025) கானொலி காட்சி வாயிலாக நடத்தப்பட்ட, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் விழாவினை தொடர்ந்து, சிவகங்கை பகுதிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் , மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி முன்னிலையில் பங்கேற்று சிறப்பித்து, சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புக்கான ஆணை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவிக்கையில்,





தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்கள் பயன்பெறும் வகையில் தொலைநோக்கு சிந்தனையுடன் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

அதில் குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்திற்கென கலைஞரின் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது, சுய உதவிக்குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச்செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்நிறுவனமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மாநில நகர்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய மூன்று முக்கியத் திட்டங்களை மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகள், நகர்புற பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட வட்டாரங்களில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு 1989ஆம் ஆண்டு, தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (மிதிகிஞ்) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்க தொடங்கியது.

அவ்வாறாக, மகளிரின் முன்னேற்றத்திற்காக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் தொலைநோக்கு பார்வையில், துவங்கப்பட்ட இத்திட்டமானது, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு,

தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் துவங்க வங்கி கடன் இணைப்புகளை ஏற்படுத்தி சுய உதவிக்குழு இயக்கத்தையும் வலுப்படுத்தி வருகிறது. அதுமட்டுமன்றி, தற்போது நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சிறப்புக் குழுக்களும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் , கடந்த ஆண்டு, மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கான வங்கிக்கடன் இணைப்பிற்கென ரூ.30,000 கோடி நிர்ணயித்து, மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு அக்குறியீடு எய்தப்பட்டு, வங்கிக்கடன் இணைப்புகள் வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, இந்த ஆண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.35,000 கோடி என இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், சிவகங்கை மாவட்டத்திற்கு மட்டும் ரூ.832 கோடி இலக்கீடு பெறப்பட்டு, அதில் இந்நிகழ்ச்சியில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளையும் சேர்த்து, இதுவரை மொத்தம் சிவகங்கை மாவட்டத்தில் 10,727 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 89,316 உறுப்பினர்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் , தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், மாநில அளவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (ஜிழிஹிலிவி) மற்றும் வாழ்ந்துகாட்டுவோம் திட்டம் (கூஷிரிறி) ஆகியவைகளின் கீழ் மொத்தம் 41,134 மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த 4,68,457 உறுப்பினர்களுக்கு ரூ.3,267.50 கோடி மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் ஊரகம் மற்றும் நகர்புற பகுதிகளைச் சார்ந்த 687 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.71.25 கோடி மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்பிற்கான ஆணைகளையும், 6 பகுதி கூட்டமைப்புகளுக்கு ரூ.0.48 கோடி பெருங்கடனுதவிக்கான ஆணைகளையும், 71 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.0.94 கோடி மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதிக்கான ஆணைகளையும், ரூ.0.21 கோடி மதிப்பீட்டில் 40 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு வட்டார வணிக வள வாழ்வாதார கடனுதவிக்கான ஆணைகளையும்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 48 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.0.63 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிக்கான ஆணைகளையும் என மொத்தம் 852 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புக்களைச் சார்ந்த மொத்தம் 9,368 உறுப்பினர்களுக்கு ரூ.73.51 கோடி மதிப்பீட்டிலான வங்கிக்கடன் இணைப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 115 பயனாளிகளுக்கு தலா ரூ.7,200/ வீதம் மொத்தம் ரூ.8,28,000/ மதிப்பீட்டிலான இலவச தையல் இயந்திரங்களும் இவ்விழாவின் மூலம் வழங்கப்படுகிறது.

இதுபோன்று அரசின் நலத்திட்ட உதவிகளை பெற்று வரும் பயனாளிகள் தாங்கள் பயன்பெறுவது மட்டுமல்லாமல் தங்களைச் சார்ந்தோர்களுக்கும், திட்டப் பயன்கள் குறித்து எடுத்துரைத்து, பிறரையும் பயன்பெறச் செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்திட வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

மேலும், திருப்பத்தூர் நகர் பகுதியில் மின் விபத்தில் உயிரிழந்த நபரின் குடும்பத்தினருக்கு இழப்பீட்டு தொகை ரூ.5,00,000/ இலட்சத்திற்கான காசோலையினையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் இந்நிகழ்ச்சியில் வழங்கினார்.

முன்னதாக, அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் , மாவட்ட ஆட்சியருடன் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்.கவிதப்பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், செயல் அலுவலர் (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) ஆதித்யா, மாவட்ட சமூக நல அலுவலர் ரதிதேவி, மாவட்ட மேலளார் (தாட்கோ) செலினா, சிவகங்கை நகர்மன்ற துணைத்தலைவர் கார்கண்ணன் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் மரியா, சின்னதுரை உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161